Registered as a NewsPaper in Sri Lanka  பக்கங்கள் : 04  விலை ரூபா; 4:50

# ஈழநாதம்

THE EELANAATHAM  Peoples Daily  மக்கள் தினசரி

நாதம் : 02  ஏப்ரல்  (01 - 04 - 1991)  திங்கட்கிழமை  ஓசை: 42

## கிளி - வைத்தியசாலைக்கு 'மைக்கிரஸ்கோப்'

(கொழும்புத்துறை)

கிளிநொச்சி, மாவட்டத்தில் நோயாளர்களின் நலன் கருதிய "மைக்கிரஸ் கோப்" கருவி ஒன்றை கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு; கா; மாணிக்கவாசகர் அன்பளிப்பாக வழங்கியுள்ளார்;

இம் மைக்கிரஸ் கோப் கருவி முப்பதினாயிரம் ரூபா பெறுமதியுடையது.

இக் கருவியானது உடலில் இரத்தம் பற்றாக்குறை, நோய்க்கிருமிகளின் இருப்பிடம் (4 ஆம் பக்கம் பார்க்க)

### பல படையினர் பற்றி தகவல்

# தெரியாது

# 38 படுகாயம்

[கொழும்பு]

மன்னார் மாவட்ட வேப்பங்குள மோதலில் பல இராணுவத்தினரைக் காணவில்லை எனவும் முப்பத்தியெட்டு இராணுவத்தினர் காயமடைந்தனர் எனவும் இவர்களில் இருபத்தெட்டுப்பேர் படுகாயமடைந்து மோசமான நிலையில் அநுராதபுர ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி இந்திய வானொலி நேற்றிரவு அறிவித்தது.

சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி மேலும் இந்திய வானொலி தகவல் தருகையில் படுகாயமடைந்தவர்களில் இரண்டு இராணுவ அதிகாரிகளும் அடங்குவர் எனவும் தெரிவித்தது.

அதேவேளை இத்தாக்குதலின் போது ஹெலிக்கொப்ரரின் உதவியுடன் நூறுவிடுத (4 ஆம் பக்கம் பார்க்க)

### வீரவணக்கம்

**ஜெகன்**
**மாதவன்**

(யாழ்ப்பாணம்)

தாண்டிக்குளம் காவலரணின் மீதான தாக்குதலின் போது கடந்த வெள்ளிக்கிழமையன்று காயமடைந்த ஜெகன் (சிவப்பெருமான் புஸ்பராசா, புளியங்குளம் வவுனியா), மாதவன் (விஜயராசா குணராசா, பூவரசங்குளம் வவுனியா) ஆகிய இரு போராளிகளும் நேற்றையதினம் வீரமரணமடைந்துள்ளனர்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றனர்.

### 3 மாதத்தில் 241 புலிகள் வீர மரணம்

(நமது நிருபர்)

ஜனவரி முதலாம் திகதி முதல் மார்ச் முப்பத்தோராம் திகதிக்கு இடைப்பட்ட நாட்களில் மட்டும் தமிழீழ விடுதலைப் புலிகளின் இருநூற்று நாற்பத்தொரு வீரவேங்கைகள் களத்தில் போராடி வீரமரணத்தைத்தழுவிக் கொண்டுள்ளனர் எனத் தெரியவருகிறது.

### சிறிலங்கா இராணுவத்தின்

# 23 சடலம்

# பார்வைக்கு

(யாழ்ப்பாணம்)

மன்னார் வேப்பங்குளம் பகுதியில் நடைபெற்ற மோதலில் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்ட இருபத்திமூன்று இராணுவத்தினரின் சடலங்களும், ஆயுதங்களும் இன்று காலை மக்கள் பார்வைக்கு வைக்கப்படவுள்ளன எனத்தெரியவருகின்றது

நேற்றுமாலை யாழ்; முற்றவெளியில் இந்த காட்சிக்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்த யாழ். மாவட்ட பிரசார பொறுப்பாளர் அஞ்சநேயர் நாதன் நிருபருக்கு கூறுகையில் இந்த இராணுவத்தினரின் உடல்கள் அனேகமாக இன்றுகாலை பத்துமணிக்கு முன்பு கொண்டுவரப்படும் என்றார்; (நேர)

### மன்னார் வளைகுடாவில்

## மூன்று மாதகாலத்திற்குள் எண்ணை அகழ்வு ஆரம்பம்

**-மோகன்**

(சென்னை)

மன்னார் வளைகுடா பகுதியில் மூன்று மாதங்களில் எண்ணை அகழ்ந்தெடுக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்படவிருக்கிறது என எண்ணை மற்றும் நிலவாயு நிர்வாகக் குழு தென்மண்டல வர்த்தக மையத்தின் இயக்குநர் வி. இ. மோகன் தெரிவித்துள்ளார்.

மன்னார் வளைகுடாவில் எண்ணை கிடைப்பதற்கான வாய்ப்பு இருப்பதாக அவ (4 ஆம் பக்கம் பார்க்க)

## தாண்டிக்குள காவலரண் மீது 'அருள் 89' தாக்குதல்

(வவுனியா)

தாண்டிக்குளம் இராணுவ முகாம் காவலரண் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் மேற்கொண்டதில் இராணுவ தரப்பில் பலத்த சேதமேற்பட்டது.

நேற்றுக் காலை 5 மணியளவில் வவுனியா தாண்டிக்குளம் இராணுவ முகாம் காவலரணை நோக்கி விடுதலைப் புலிகள் ஆர். பி. ஜி ஷெல் தாக்குதலையும், அருள் 89 (4 ஆம் பக்கம் பார்க்க)

### விமானக் குண்டுவீச்சு

(வவுனியா)

சிறிலங்கா விமானப்படையைச்சேர்ந்த இரண்டு குண்டுவீச்சுவிமானங்கள் நேற்றுக் காலை வவுனியா மாவட்டத்தில் உள்ள மருக்காரம்பளை, தேவகுளம், பேயாடி கூழாங்குளம் ஆகிய பகுதிகளை நோக்கி எட்டுக்குண்டுகளை வீசியுள்ளன. சேதவிபரம் தெரியவரவில்லை.

### மரண தண்டனை

(செ. தா மை.)

வழிப்பறிக்கொள்ளைச் சம்பவம் ஒன்றில் ஈடுபட்டவரான தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினரான வித்தன் என்பவருக்கு நேற்றுக் காலை 11மணியளவில் தனங்கிளப்பு சந்தியில் வைத்து மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

தாவடி - கொக்குவிலைச் சேர்ந்த சடையர் லிங்கநாதன் (4 ஆம் பக்கம் பார்க்க)

## தாண்டிக்குளம் முகாமில் பல்லால் கடித்த படை!

(வவுனியா)

வவுனியா தாண்டிக்குளம் சோதனை முகாம் பகுதியில் நிலைகொண்டு நிற்கும் சிறிலங்கா இராணுவத்தினர் பொதுமக்கள்மீது புரிந்துவரும் அட்டகாசங்கள் மீண்டும் அதிகரித்துள்ளன.

பகல் 12 மணியளவின் பின்னர் தினமும் மதுபோதையில் காணப்படும் இராணுவத்தி (4 ஆம் பக்கம் பார்க்க)

## அச்சத்துடன் வாழும் வவுனியா நகர்த் தமிழர்

(வவுனியா)

வவுனியா நகரப் பகுதியில் வாழும் தமிழ்க் குடும்பங்கள் தொடர்ந்து அச்ச நிலையில் வாழ்ந்து வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தினமும் மாலையானவுடன் வீட்டிற்குள்ளேயே அடைந்து கிடக்க வேண்டியுள்ளதாகவும் இரவுவேளைகளில் வீதிகளில் படையினரின் நடமாட்டமே காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பகுதிகளில் இனந்தெரியாத குழுக்களினா (4 ஆம் பக்கம் பார்க்க)

### பிற்போடப்பட்டது

நேற்றுமுன்தினம் பிற்பகல் 2. 00 மணியளவில் யாழ். சன்மார்க்க மகாவித்தியாலய மண்டபத்தில் தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் நடாத்தப்பட இருந்த "தொழில்நுட்பமும் (4 ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சைக்காக இராணுவம் மோதலில் இறங்கவில்லை

**-சிறில் ரணதுங்க**

ஐந்தாம் வகுப்பு பரீட்சை தங்குதடையின்றி நடைபெறவேண்டும் என்பதால் சிறிலங்கா இராணுவத்தினர் நேரடி மோதலில் இறங்கவில்லை என சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றுமுன்தினம் வடக்குக் கிழக்கில் இடம்பெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைகள் அமைதியாக கிராமங்கள் தோறும் (4 ஆம் பக்கம் பார்க்க)

### அரசியலில் பத்து வயதும் ஆகாத

## ராஜீவ் காந்தியும் அவரது அரசியல் பெண் சிநேகிதியும்

(பட்னா)

ராஜீவ்காந்திக்கும், தமிழ் நாட்டிலுள்ள அவரது அரசியல் பெண் சிநேகிதிக்கும் பொதுவாழ்வு வயது பத்து கூட ஆகியிருக்காது அவர்கள் என்னைத் தேசவிரோதி என்றார்கள் அறுபத்தேழு வயதாகும் நான் பொதுவாழ்வில் 53 வருடங்களைச் செலவிட்டு இருப்பதுடன், பொதுப் பிரச்சினைகளுக்காக இருபதுக்கும் அதிகமான தடவைகள் சிறை சென்றவன் எனக் கூறினார் தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதி. அண்மையில் பீஹார் மாநில தலைநகர் பட்னாவில் தேசிய முன்னணி ஏற்பாடு செய்த பொதுக்கூட்டத் (4 ஆம் பக்கம் பார்க்க)

## கலை நிகழ்ச்சிகள் நடத்த மக்களிடம் கோரிக்கை

முத்தமிழ் விழாவை வரவேற்கும் வகையில் எதிர்வரும் சித்திரை முதலாம் நாளில் இருந்து ஐந்தாம் நாள் வரை மக்களே தமது கிராமங்களில் கலை கலாசாரப் பிரிவினால் அங்கீகரிக்கப்பட்ட கலை நிகழ்ச்சிகளை நடாத்த வேண்டும் என விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் பிரசாரப் பிரிவு கேட்டுள்ளது.

எதிர் வரும் 6.4.91 இல் (4 ஆம் பக்கம் பார்க்க)

# முத்தமிழ் விழா ஏப்ரல் முதல் 5 வரை

## தேவை

சாவித்த சம்பேச, ஒடிக்க சொல், Gum (கம்), Vicks போத்தல், பவுடர் டப்பா பேசல் பொயின்ட் பேனா, சனிக்கிழமைகளில் மட்டும் காலை 9-00 மணிமுதல் 12-00 மணி வரை வாங்கப்படும்; எஸ். சத்தியன், 55, மணிக்கூட்டு வீதி, கொழும்பு தெருடியோ பின்புறம், யாழ்ப்பாணம். (B. 2169)

---

## விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

91 Dec.
O/L DAY CLASSES
(8-30 – 1-30)
ஆரம்பமாகிவிட்டது
(27—03—1991)

ஆண்டு
6, 7, 8, 9, 10 ஆம்
வகுப்புக்கள்
ஆரம்பம்: 3. 4. 1991

மு. குறிப்பு:
எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படுகின்றது.
(B-2221)

---

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவு உற்பத்திக்குழுக்களின் இணையம் ஏற்பாடுசெய்துள்ள "கடற்றொழிலும் இன்றைய சூழ்நிலைக் கேற்ற தேவைகளும்" என்னும் கருத்தரங்கு இன்று 1-ஆம் திகதி பிற்பகல் 2-மணிக்கு குருநகர் கார்மேல்மாதா மண்டபத்தில் நடைபெறும். தமிழீழ ஆய்வு நிறுவனத்தினர் கலந்து சிறப்பிப்பர். (21)

## ஆசிரியர் தொகை 1,84,000

(கொழும்பு)

இலங்கையில் 1,84,000 ஆசிரியர்கள் கடமையாற்றுகிறார்கள் என புள்ளி விபரக் கணிப்பீடு தெரிவிக்கின்றது.

## கலந்துரையாடல்

(நமது நிருபர்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி மண்டபத்தில் இன்று பிற்பகல் 2 00 மணிக்கு நடைபெற இருக்கும் கலந்துரையாடலில் சங்கானை, சண்டிலிப்பாய் உடுவில், தெல்லிப்பளை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் அடங்கும் சிற்றூரவைகள் ச.ச நிலையங்கள், கடற்தொழிலாளர்சங்கங்கள், விவசாயிகள் சங்கங்கள், மாதர்சங்கங்கள் மற்றும் பொதுஸ் தாபனங்களைச் சேர்ந்தவர்களை கலந்து கொள்ளுமாறு பிரசாரப் பிரிவினர் கேட்டுள்ளனர்.

நாளை 2ஆம் திகதி கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மண்டபத்தில் பிற்பகல் 2 00 மணிக்கு நடைபெற இருக்கும் கலந்துரையாடலில் யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவினைச் சேர்ந்த மேற்படி அமைப்புக்களுக்கு இச் சந்திப்பு நடைபெறும் என்றும் பிரசாரப் பிரிவு அறிவித்துள்ளது.

---

## மில்க்வைற் திரவ சவர்க்காரம்

சகல தேவை அழுக்கு நீக்கி

*Milk White Liquid Soap*

**All Purpose Dirt Remover**

சாதாரண வீட்டுச் சலவைக்குப் பாவிக்கும் முறை

1. ஒரு லீற்றர் நீரில் பத்து மேசைக்கரண்டி மில்க்வைற் திரவ சவர்க்காரத்தை ஊற்றவும்.
2. நுரை செறிந்திட நீரைக் கலக்கவும்.
3. சலவையுள் ளாத் துணியை அமிழ்த்திக் கலவை துணியில் செறியச் செய்யவும்.
4. பத்து நிமிடத்தில் துணியைச் சுத்த நீரில் நன்றாக அலசி எடுக்கவும்.
5. சலவை செய்யும் துணிகளின் எண்ணிக்கைக் கேற்ப பௌவிகிற்கும் ஏற்ப அளவில் மாற்றம் செய்யவும்.

சகல ப. நோ. கூ. சங்கங்களிலும், கடைகளிலும் மில்க்வைற் விற்பனையாகின்றன.

**மில்க்வைற் யாழ்ப்பாணம்.**

(B-2180)

---

## 31ஆம் நாள் நினைவு



தாயின்மடியில் 1948- 01- 20 தாயகமண்ணுக்கு 1991- 03- 02

### திரு ந. அரசரத்தினம்

தமிழீழ தனியரசு காண
பொருளாதாரவளம் வேண்டி
பொழுதெல்லாம் உழைத்தும்
கிராமங்கள் தோறும் சளைக்காது நின்று
ஆய்வுபல செய்த ஆற்றல் பலமிக்க
இணையிலா எங்கள் இனியவரே

(B/2223) வடமராட்சி கிழக்கு மக்கள்.

---

## அந்தியேட்டி அழைப்பு



ஆண்டவன் படைப்பு 1943 - 03 - 20 அரச அழிப்பு 1991 - 03 - 04

### மார்க்கண்டு மகேஸ்வரன்

மாதலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் வவுனியா ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ் உரிமையாளருமான திரு மார்க்கண்டு மகேஸ்வரன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 03-04-1991 புதன்கிழமை வவுனியாவிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்: வே. செல்வராஜா

கல்மடு வடக்கு,
வவுனியா.

(B- 2215)

---

## 1987 பரீட்சை முடிவுகள் இன்னமும் கிடைக்கவில்லை

மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் 1987 ஆம் ஆண்டு பயிற்சி முடித்த ஆசிரிய மாணவர்களுக்கான இறுதியாண்டுப் பரீட்சை முடிவுகள் வெளிவரவில்லை.

1987 ஆம் ஆண்டு மேற்படி பரீட்சை நடைபெற்றபோது அன்றுள்ள சூழலில் இரண்டு பாடங்களுக்கு பரீட்சை நடைபெறவில்லை. பின்னர் அந்த இரண்டு பாடங்களும் 1988,89 ஆம் ஆண்டுகளுக்கான பரீட்சையுடன் நடைபெற்றன. ஆனால் 1988,89 ஆம் ஆண்டுகளுக்கான பரீட்சை முடிவுகள் வெளிவந்துள்ள போதிலும் 1987 ஆம் ஆண்டிற்கான முடிவுகள் வெளிவரவில்லை.

இதனால் மேற்படி ஆசிரியர்கள் பயிற்சி முடித்தவர்களுக்குரிய சம்பளத்தைப்பெற முடியாமலும், பதவி உயர்வுகளுக்குத் தோற்ற முடியாமலும் புதைவிரத ஆணைச்சீட்டைப்பெற முடியாமலும் உள்ளனர்.

---

## ENGLISH CLASSES

GRAMMAR
★ Basic
★ Advance
★ By Reginold

(C. I. M. A. A. A. T. பல்கலைக்கழக மாணவர்களுக்கு உகந்தது)

ஆரம்பம்: 05 - 04 - 1991

**North Ceylon Technical Institute**
14, ST. PETERS LANE,
HOSPITAL ROAD, JAFFNA.

(B-2224)

---

## கணணிக் கல்வி

❋ தரவுச் செயல்முறைப்படுத்தலும் கணனித்திட்டமிடலும்.

ஆரம்பம்: 05—04—1991 மாலை 3-00 மணி
(திங்கள், புதன், வெள்ளி வகுப்புக்கள்)

ஆரம்பம்: 06—04—1991 மாலை 3-00 மணி
(சனி, ஞாயிறு வகுப்புக்கள்)

தமிழ்ப் பிரதேசத்தில் தனித்துவம் மிக்க கணணிக் கல்வி நிறுவனம். கணணித் தொழில் நுட்பத்தை இலகுவில் கற்றிட நாடவேண்டிய நிறுவனம்.

**யுனிக்கோ கணணி நிலையம்**
37, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(B-2225)

---




## 1991 - 04 - 01

1985ஆம் ஆண்டு பொத்துவிலில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலின் போது வீரமரணமடைந்த

❋ **ரமேஸ்** (ராதா கிருஷ்ணன்-நாவலப்பிட்டி)

1986ஆம் ஆண்டு பருத்தித்துறையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிமோதலில் வீரமரணமடைந்த

**ஸ்டாலின்** (கிருஷ்ணபிள்ளை சிறீஸ்கந்தநாதன்-புலோலி)

1987 இல் வீரமரணமடைந்த

**ராஜன்** (வாழைச்சேனை - மட்டக்களப்பு)

இதே ஆண்டு காங்கேசன்துறையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த

**லெப். மயூரன்/பேபி** (இராசரத்தினம் செல்வகுமார் கல்வயல்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

❋ மேற்குறிப்பிடப்பட்டிருக்கும் மாவீரர் ரமேஸ் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

— விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B/2187)

## ❋ சிந்தனைக்கு ❋

ஒரு போதும், கதிகலங்கி ஏக்கம் கொள்ளாதே. ஏக்கம் கொண்டாலும், தொடர்ந்து உழை

எட்மன்பர்க்


# ஈழநாதம்

61, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 01-04-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


## தொடர்ந்து அங்கலாய்க்கும் குர்திஷ் தலைமை

“மனிதாபிமான முறையிலாவது தங்களுக்கு வாஷிங்டன் உதவி செய்ய மறுத்திருப்பது மிகமிக வேதனை அளிக்கும் விடயமாகவுள்ளது” என ஈராக்கின் வடபாகத்தில் குர்திஷ் இன மக்களுக்கு தனிநாடு கோரிப் போராடிவரும் குர்திஷ் இனத்தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

வளைகுடாப் போரில் அமெரிக்காவால் ஈராக் தோற்கடிக்கப்பட்ட போது பிராந்தியச் சூழல்களையும், தமது நிலையினையும், கருத்திற் கொள்ளாது அமெரிக்காவை நம்பி போராட்டத்தில் இறங்கியமையே குர்திஷ் இனத் தலைவர்களின் இன்றைய அங்கலாய்ப்பிற்குக் காரணமாகும்.

வல்லரசுகள் தமது தேவையின் போது போராட்டங்களை ஊக்குவிப்பதும் பின்னர் கைவிடுவதும் ஒன்றும் புதியதொரு விடயம் அல்ல, இதற்கு உலகின் பல்வேறு உதாரணங்கள் உண்டு. ஆனால் இதற்கு ஏனைய போராட்டங்களை விட குர்திஷ் இனத்தவரின் போராட்டம் சிறந்ததொரு உதாரணமாகும்.

குர்திஷ் இனத்தவர் வல்லரசுகளாலும் அண்டை நாடுகளினாலும் ஏமாற்றப்பட்டது இது முதற் தடவையல்ல. 1947 ஆம் ஆண்டு குர்திஷ் இனத்தவர் ஈரானின் ஒருபகுதியில் தமது தனி அரசை நிறுவினர். அதற்கு சோவியத் யூனியன் தனது ஆதரவைக் கொடுத்தது பின்னர் ஈரானுடன் ஏற்பட்ட எரிபொருள் உடன்பாட்டினால் குர்திஷ் இனத்தவரை கைவிட்டது, காட்டிக் கொடுத்தது. ஈரான் இராணுவ நடவடிக்கை எடுத்தது. குர்திஷ் குடியரசிற்கு தலைமை தாங்கிய ஈயாக் அகமட் தூக்கிலிடப்பட்டார்.

1958 இல் ஈராக்கில் மன்னராட்சி கவிழ்க்கப்பட்டு இராணுவத்தினர் ஆட்சியைக் கைப்பற்றிய போது அமெரிக்காவும் ஈரானும் ஆதரவு வழங்கி ஈராக்கின் இடதுசாரி அரசாங்கத்தைக் கவிழ்க்க போராட்டத்தை ஊக்குவித்தனர். பின்னர் ஈராக்கில் ஆட்சிக்கு வந்த பாத்கட்சி குர்திஷ் இன மக்களின் சுயாட்சியை ஏற்றுக் கொள்வதாகக் கூறி போராட்டம் தணிந்த பின் அவர்களை ஏமாற்றியது.

1980 – 1988 ஆம் ஆண்டுவரை நடந்த ஈரான் – ஈராக் போரில், ஈரான் தனி அரசு அமைப்பதற்கு உதவுவதாக வாக்குறுதி அளித்ததினால் போராளிகள் ஈரானுக்கு ஆதரவு கொடுத்தனர். ஆனால் போர் முடிந்த போது ஈரான் குர்திஷ் இனத்தவரைக் கைவிட்டது. போரின் போது ஈரானுக்கு ஆதரவு வழங்கியமைக்காக ஈராக் வஞ்சம் தீர்த்துக் கொண்டது. குர்திஷ் இனமக்கள் ஈராக்கை விட்டு அகதிகளாக விரட்டப்படப்பட்டனர். இரசாயன ஆயுதத்திற்கு ஆயிரக்கணக்கில் பலியாகினர்.

இன்று மீண்டும் ஒருதடவை குர்திஷ் இனப் போராளிகளும் மக்களும் அமெரிக்காவினாலும் அதன் கூட்டாளிகளினாலும் ஏமாற்றப்பட்டுள்ளனர். யுத்த நிறுத்த பேச்சின் மூலம் அமெரிக்கா ஈராக்கின் இராணுவ நடவடிக்கைகள் கட்டுப்பண்ணப்படுத்தும், இவ்வேளையில் தமது இலக்கை அடைந்துவிடலாம் எனப் போராளிகள் தப்புக் கணக்குப் போட்டனர்.

ஈராக்கின் பிராந்தியச் சூழல், அமெரிக்காவினதும் அவர்களது கூட்டாளிகளின் நலன்கள் என்பனவற்றை குர்திஷ் இனத் தலைவர்கள் தமது கருத்திற் கொள்ளவில்லை. இவையாவற்றிற்கும் மேலாக தமது கடந்த கால வரலாற்றையே அவர்கள் படிப்பினையாக கொள்ளவில்லை.

சர்வதேச சூழ்நிலைகளிலும் பிராந்திய சூழலிலும் ஏற்படும் பெரிய அளவினதான அரசியல் இராணுவ ரீதியான மாற்றங்கள் தேசிய இனங்கள் தமது சுய நிர்ணய உரிமைகளை பெற்றுக் கொள்வதற்கான ஒரு சிறப்பான காலப்பகுதிதான். ஆனால், தேசிய இனங்கள் தாம் தனித்து நின்று போரிடக் கூடிய நிலையில் இருக்கும் போதுதான் தேசியப் போராட்டங்கள் வெற்றியடைவதற்கான வாய்ப்புக்கள் அதிகம்,

அதாவது ஈராக் இன்று பலவீனப்பட்டுள்ள நிலையில், குர்திஷ் இனத்தவர் தமது விடுதலையைப் பெற்றுக் கொள்ள நல்லதொரு சூழ்நிலை உருவாகியது உண்மை தான். ஆனால், அவர்கள் தமது விடுதலைக்காக வெளிநாட்டவரிடம் இருந்து உதவியை எதிர்பார்த்திருப்பது தான் அவர்களுடைய தவறாகும்.

ஒரு தேசிய இனவிடுதலைப் போராட்டத்தை தனித்து நின்றுபோராடுவது என்பது மிகவும் சிரமமான காரியம்தான். இதனால்பல நட்பு உறவுகளை வளர்த்துக் கொள்ளுதல் அவசியமாகின்றது. ஆனால், திறமையான அணுகுமுறை அவர்களை எமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமே ஒழிய அவர்கள் எம்மைப்பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கக் கூடாது

தமிழீழ விடுதலைப் போராட்டத்திலும் தமிழ் மக்களைப் பணயமாக வைத்து இந்தியா தனதுதேவைகளை நிறைவு செய்யப் பார்த்தது. ஆனால், குர்திஷ் இனத் தலைவர்கள் போல் அல்லாமல், விடுதலைப் புலிகள் தலைமை இதற்கு இடம் கொடுக்கவில்லை. இதன் காரணமாக தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டார்கள் என்ற நிலை ஏற்படவில்லை.

### தேசிய இனவிடுதலைப் போராட்டத்திற்கு

# சக்தி ஊட்டும் முத்தமிழ் விழாவிற்கு மாணவர் ஒத்துழைக்க வேண்டும்

எமது கலை கலாசாரத்தைப் பேணிப் பாதுகாப்பதோடு எமது இலட்சிய உறுதியையும் வலுப்படுத்த எமது தேசிய இன விடுதலைப் போரை முன்னெடுக்கின்ற சக்தியை எமது மக்களுக்கு வழங்கக் கூடிய இம் முத்தமிழ் விழாவை மாணவர்களே முழு ஒத்துழைப்பு வழங்கிச் சிறப்பிக்க வேண்டும்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரசாரப் பிரிவு கடந்த 29 ஆம் திகதி வெளியிட்ட “முத்தமிழ் விழாவும் மாணவர்களும்” என்ற தலைப்பில் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாணவர்களே இவ் விழாவின் இயல், இசை, நாடகம் போன்ற கலை கலாசார நிகழ்வுகளில் பங்கு கொண்டு எமது தேசிய இன விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையின் விபரம் வருமாறு: எமது தேசிய விடுதலைப் போராட்டம் இன்று ஒரு பாரிய வளர்ச்சியடைந்து தமிழ் மக்களுக்கும் தமிழ் ஈழத்திற்கும் புகழ் சேர்த்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் நாம் எமது தேசிய விடுதலையை முன்னெடுக்கும் அதே நேரம் எமது கலை, கலாசாரத்தையும் பேணிப் பாதுகாக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். எமது பாரம்பரிய கலை, கலாசாரம் மேற்கத்தேச நாகரிக ஊடுருவலால் அழிந்து போகும் நிலை இன்று நிலவுகின்றது. எனவே நாம் இந்த நிலையை வளரவிடாது எமது கலை, கலாசாரத்தையும் கட்டிக்காக்க வேண்டும்.

தமிழர்களின் கலை, கலாசாரத்தைப் பிரதி பலிக்கும் வகையில் “முத்தமிழ் விழாவை” இந்த ஆண்டில் இருந்து மாபெரும் விழாவாகக் கொண்டாடுகிறோம்.

புராதன காலமாகிய சங்க காலத்திலிருந்தே எமது கலை, கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் இப்படியான நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இக்காலத்தில கற்றோரும் மற்றோரும் தமது இலக்கியத் திறனை வளர்ப்பதற்காக இப்படியான நிகழ்ச்சிகளை நடத்தினர். அதன் மூலம் அன்றைய இலக்கியங்கள் வேகமாக வளர்ந்தன. இதே போல இன்று மருவி வரும் எமது கலை, கலாசாரத்தை வளர்ப்பதற்காக நாம் பாரிய அளவில் இம் முத்தமிழ் விழாவை ஏற்பாடு செய்துள்ளோம்.

எமது பாரம்பரிய கலை, கலாசாரத்தையும் தேசிய தன்மையையும் பேணிப் பாதுகாப்பதற்கான இப் போராட்டத்தில் இப்படியான நிகழ்ச்சிகள் நடைபெறுவது எமது இலட்சிய உறுதியை வலுப்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

## அநுராதபுர நீதிமன்றம் தமிழ்ப்பயணிகள்மீது தண்டம்

(வவுனியா)

கொழும்பிலிருந்து வடபகுதி நோக்கி வந்த தமிழ்ப்பிரயாணிகள் அநுராதபுரத்தில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்திற்கு ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டனர்.

இச்சம்பவம் பற்றித் தெரிவிக்கப்படுவதாவது, கடந்த 27 ஆம் திகதி காலை அநுராதபுரம் ரயில் நிலையத்தில் தரித்திருந்த ரயிலில் சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிஸார், மண்ணெண்ணை கொண்டு வந்துள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டு பெண்கள் உட்பட இருபது தமிழ்ப் பிரயாணிகளை கைது செய்து அநுராதபுரம் பொலிஸ்நிலையத்தில் விளக்கமறியலில் அடைத்து வைத்தனராம்.

வட பகுதிக்கு 5 லீற்றர் மண்எண்ணை கொண்டு செல்வதற்கு உத்தரவு உள்ளது என்று கைதான பிரயாணிகள் கூறிய போதும் பின்னர் மேற்படி இருபது பிரயாணிகளையும் ஊர்வலமாக நீதிமன்றத்திற்கு பொலிஸார் அழைத்துச் சென்று நீதவான் முன்னிலையில்நிறுத்தினராம். கைது செய்யப்பட்டவர்கள் குற்றப்பணம் கட்டி வெளி வந்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் அரசாங்க ஊழியர்களும் அடங்குவார்கள். பின்னர் குறிப்பிட்ட பிரயாணிகளை பகல் வேளையில் அநுராதபுரம் நகர் வழியாக நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்ற போது வீதியில் நின்ற பொதுமக்கள் தம்மைப் பார்த்து பரிகாசம் செய்தனர் என்றுகுற்றப்பணம் கட்டி விடுதலை பெற்று வந்த பிரயாணிகள் ஈழநாதத்திற்குத் தெரிவித்தனர். தம்மை அவமானப்படுத்துவதற்காகவே பொலிஸாரினால் தாம் இவ்வாறு நடாத்தப்பட்டதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்:

அற்புதம் ஆனந்தராசா, அருளானந்தம் நித்தியானந்தராசா, சாமுவேல் ஜெயக்குமார் (சுண்டிக்குளி) ஆகியோர் உட்பட இருபத்தி ஐந்து பேர் பொலிசாரினால் அவமானப்படுத்தப்பட்டவர்களாவர். (தி)

## கொழும்பில் சீரழியும் தமிழ்ப் பெண்கள்

ஆசிரியர்
ஈழநாதம்
ஐயா,

இன்று வடபகுதியிலிருந்து குறிப்பாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் செல்வோரின் தொகையில் இளம் பெண்களின் தொகையே அதிகமானது என்பது அனைவருக்கும் தெரியும். வெளிநாடுகளிலுள்ள தங்களது கணவன்மார், அல்லது சகோதரருடன் தொடர்பு கொள்வதற்காகவும் வெளிநாடு செல்ல முயற்சிகள் எடுப்பதற்காகவும் அவர்கள் செல்கின்றனர். கொழும்பில் விடுதிகளில்தங்கியிருக்கும் இவர்களது நடவடிக்கைகள் தற்போது மிகவும் மோசமானவை. யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பெண்களை ‘விபச்சாரிகள்’ என்று வர்ணிக்கும் அளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது. கொழும்பிலுள்ள சிங்கள முஸ்லிம் ஆடவர்கள் யாழ்ப்பாணத்து யுவதிகளை மிகவும் சுலபமாகத் தங்களது தேவைகளுக்குப் பயன்படுத்திக்கொள்கின்றனர்.

விடுதிகளில் தங்கியுள்ள இளைஞர்களை சோதனையிடும் வகையில் சிங்கள பொலிஸ்காரர்கள் விடுதிகளுக்கு அடிக்கடி வருகின்றனர். அப்போது அங்கு தங்கியுள்ள தமிழ் யுவதிகளின் தொடர்பு அவர்களுக்குசுலபமாகக்கிடைத்துவிடுகிறது, சில இளைஞர்களை கைதுசெய்து கொண்டு போகும்போது அவர்களின் சகோதரிகளே அவர்களை விடுவிக்கும் முயற்சியில் அடிக்கடி பொலிஸாரை தொடர்பு கொள்ள வேண்டியுள்ளது. அவ்வாறான சமயங்களில் இவர்கள், முஸ்லிம் படையினர் தங்களது பாலியல் தேவைகளுக்கு அவர்களைப் பயன்படுத்திக்கொள்கின்றனர்.

[illegible] இது நமது யுவதிகளுக்குப் பழக்கப்பட்டுவிடுகிறது. படமாளிகைகள், கேளிக்கை விடுதிகள், கடற்கரைப்போரங்கள், பூங்காக்களில் நமது யுவதிகள் தமிழரின் மானத்தை ஒட்டுமொத்தமாக விற்பனை செய்கிறார்கள். கொழும்பு செல்லும் வழியில் வவுனியா சோதனை முகாமிலும் பல விடயங்கள் நடைபெறுகிறது. யுவதிகளை தனியாக அழைத்துச் சென்று விசாரணை செய்கின்றனர். விடுதலைப் புலிகள் முகாம்களையும் அவர்களின் நடவடிக்கைகளையும் தெரிவிக்குமாறு அந்த யுவதிகள் கேட்கப்படுகின்றனர். கொழும்பில் தற்போது நமது பெண்கள் மூலம் புலிகள் பற்றிய விபரங்கள் பாலியல் தேவைகள் இரண்டும் பெற்றுக்கொள்ளப்படுகிறது என்பது கசப்பான ஓர் உண்மை.

## எதிர்பார்த்ததை விட அதிகம்

(நமது நிருபர்)

தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழிற் பயிற்சித் திட்டத்திற்கு எதிர்பார்த்ததை விட கூடுதலானோர் பயிற்சி பெற வந்துள்ளனர். பயிற்சியாளர்களுக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா ஊக்குவிப்புத் தொகையும், சீருடைகளும், கருவிகளும் வழங்கப்படவுள்ளன.

## வாசகர் கடிதம்

தயவுசெய்து இளம் பெண்கள் கொழும்புக்குச் செல்வதை தடைசெய்ய வேண்டும் அல்லது மிகுந்த விசாரணைகளுக்குப் பின்னரே பாஸ் கொடுக்கப்படுதல் வேண்டும். கொழும்பிலிருந்து திரும்பி வரும் பெண்களின் நடவடிக்கைகளை ஆராய்ந்து விசாரணை செய்யவேண்டும். இப்போது இது மிக அவசியமான தேவை.

தமிழரின் மானத்தைக் காப்பதற்காக இரத்தம் சிந்தி ஓர் போராட்டம் இங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதேநேரம் இங்குள்ள பல தமிழ் யுவதிகளால் தமிழனின் உயிருக்கும் மேலான மானம் கொழும்பு நகரத்தில் விற்பனை செய்யப்படுகிறது. தேசத்துரோகிகளுக்கு வழங்கப்படும் அதியுயர்ந்த தண்டனையை இவர்களுக்கு வழங்கினாலும் அது சரியானதாகவே இருக்கும். தயவுசெய்து இக்கடிதத்தில் உள்ளவற்றை கவனத்தில் எடுப்பீர்கள் என நான் மிகவும் எதிர்பார்க்கிறேன்.

இப்படிக்கு
யாழ்ப்பாணம். கணேசதுரை

# தமிழருக்கு தனி அரசு அமைக்க உரிமை உண்டு என

# சிறிலங்கா அரசு சிங்களவருக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்

## சுவாமி சித்ருபானந்தா

(யாழ்ப்பாணம்)

தமிழ், சிங்கள அரசியல்வாதிகள் இனவாதத்தைத் தமது சொந்த நலன்களுக்காகப் பாவித்ததன் தண்டனையை இன்று அனுபவித்து வருகிறார்கள். இனவாதம் என்பது ஒரு விஷச் சக்கரம். அது திரும்பத் திரும்ப நிகழ்கிறது. இதைத் தடுத்து நிறுத்தவேண்டுமானால் தமிழ் மக்கள் தமக்கென ஒரு அரசை அமைத்து வாழ உரிமையுடையவர்கள் என்பதைச் சிறிலங்கா அரசு பெரும்பான்மை சமூகத்திற்கு (சிங்களவர்) எடுத்துச்சொல்வது அதன் முக்கிய கடமையாகும் இவ்வாறு பருத்தித்துறை சிறி ராமகிருஷ்ண சேவாச்சிரம மடாதிபதி சுவாமிகள் சித்ருபானந்தா இங்கிலாந்து, கனடா, அவுஸ்திரேலியா, இந்தியா ஆகிய நாடுகளின் தலைவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார். கடிதத்தின் பிரதி சிறிலங்காவின் பிரதமருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இக்கடிதத்தின் சாராம்சத்தை அரசியல் நோக்குடன் அணுகக் கூடாது. இது ஒரு சன்னியாசியின் உள்ளக்குமுறலாகும். அதிகாரத்திலிருக்கும் அரசுக்கு உயர்ந்த ஒழுக்க நியமங்களும், உண்மைத் தன்மையும் இருக்கவேண்டும். சிறிலங்காவைப் பொறுத்தவரையில் சமயத் தலைவர்களில் பலர் அரசாங்கத்தைச் சரியாக வழிகாட்டத் தவறிவிட்டார்கள். உயிருக்கு நாடு, சாதி என்பது இடையாது. அது புனிதமானது. இந்தத் தீவில் நாம் கௌரவமாக வாழ்வதை அரசியல் அதிகாரத்தால் தடுக்க முடியாது.

ஆளும் கட்சியோ அல்லது எதிர்க்கட்சிகளோ இனப்பிரச்சினையைத் தமது சொந்த நலனுக்காக பாவிக்கக்கூடாது என்றும், தீர்வொன்றைக் காண்பதற்கு அனைத்துக்கட்சிகளும் தமது சொந்த நன்மைகளைக் கைவிடுவதை இனியும் தாமதப்படுத்தினால் எதிர்காலம் இருள்மயமாக அமையும் என்று அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உல்பா தீவிரவாதிகளுடன் மத்தியஅரசுபேச்சுவார்த்தை

## சுபோத்கான் சகாய்

(டில்லி)

அஸாம் மாநிலத்தில் அமைதிச்சூழலை ஏற்படுத்தும்நோக்குடன் "உல்பா" தீவிரவாதிகளுடன் மத்திய அரசு பேச்சுவார்த்தை நடாத்துமென இந்திய உள்துறை அமைச்சர் சுபோத்கான் சகாய் தெரிவித்தார்.

இப்பேச்சுவார்த்தை நாளை செவ்வாய்க்கிழமை ஹோகாத்தியில் நடைபெறும் எனவும் அவர் தெரிவித்தார்.

# மதச்சார்பற்ற ஒரேகட்சி பாரதீய ஜனதாக் கட்சியே

## -எல். கே. அத்வானி

(டில்லி)

பாரதிய ஜனதாக் கட்சியே உண்மையான மதச்சார்பின்மை கொண்டது என்று அதன் தலைவர் எல். கே. அத்வானி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய எல். கே அத்வானி இந்தியாவின் மதச்சார்பின்மை கட்சி பாரதீய ஜனதாக் கட்சிஒன்றுதான் என்று தெரிவித்தார்.

லோக்சபாத் தேர்தல் 450 இடங்களில் தமது கட்சி போட்டியிடுகிறது என்றும் தேசியளவிலான தேர்தல் கூட்டு எதுவும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## கூட்டம்

(கொழும்புத்துறை)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின், யாழ் பிரிவு புதிய நிர்வாகிகளின் முதலாவது ஆட்சிக் குழுக் கூட்டம் இன்று (1-4-91) திங்கட்கிழமை காலை பத்து மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது. (24)

# கேரளசட்ட சபையைகலைக்க முதல்மைச்சர் கோரிக்கை

(திருவனந்தபுரம்)

கேரளா சட்டசபையை எதிர்வரும் வெள்ளிக்கிழமை கலைப்பதென மாநில ஆளுநரைப் பரிந்துரைக்கக் கேரள மந்திரிசபை முடிவெடுத்துள்ளது. இது தொடர்பான கடிதத்தை மாநில முதல்வர் ஈ. பி. நாராயணன் ஆளுநருக்கு அனுப்பியுள்ளார்.

லோக்சபைத் தேர்தலுடன் கேரள சட்டபேரவைத் தேர்தலையும் நடத்துமாறு தேர்தல் ஆணைக்குழுவை நாராயணன் கேட்டுள்ளார். மாநில சட்டப்பேரவையின் பதவிக்காலம் இன்னும் ஓராண்டு வரை இருப்பதால் இப்போது தேர்தல் நடத்துவதன் மூலம் தேவையற்ற செலவைத் தவிர்க்கமுடியும் என்று முதலமைச்சர் தேர்தல் ஆணைக் குழுவிடம் தெரிவித்திருக்கிறார்.

சட்டப்பேரவைத் தேர்தல் நடத்துவது குறித்துத் தீர்மானிப்பதற்குமுன்னால் கேரள சட்டசபை கலைக்கப்படும் வரை தேர்தல் ஆணைக்குழு காத்திருக்கும் என்று தேர்தல் குழு ஆணையாளர் ரி. என். சேஷன் கூறியிருக்கிறார்.

இதேவேளை நேற்று மேற்கு வங்காள சட்டசபையும் கலைக்கப்பட்டுள்ளது. அமைச்சரவையின் பரிந்துரையின் முடிவின் நேற்றுப் பிற்பகல் மேற்கு வங்காள ஆளுநர் இந்த முடிவை எடுத்தார்.

## ஷெல்தாக்கு

தாண்டிக்குளம் இராணுவ முகாமைச்சேர்ந்த சிறிலங்கா இராணுவத்தினர் நேற்றுக் காலை ஐந்து மணி தொடக்கம் மாலை மூன்றுமுப்பது மணி வரை தொடர்ச்சியான துப்பாக்கிப் பிரயோகத்தையும், ஷெல்தாக்குதலையும் மேற்கொண்டனர்.

*தெரியாது*

லைப் புலிகளைத் தாம்கொன்றதாகவும் கடந்த மூன்றுநாட்களில் மட்டும் மூன்னூறு விடுதலைப் புலிகள் கொலலப்பட்டதாகவும் தெரிவித்தது. அம்மூன்றுநாள் மோதல்களிலும் 27 இராணுவத்தினர் பலியானதாகவும் அச்செய்தி மேலும் தெரிவித்தது.

*தாண்டிக்குள*

வர் காரணம் எதுவுமின்றிகண்மூடித்தனமாகபிரயாணிகளை தாக்கி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 29ஆம் திகதி வவுனியா நகரப்பகுதியிலிருந்து பொருட்கள் கொள்வனவு செய்து சுமந்துவந்த ஒருவரை சோதனைக்குட்படுத்திய இராணுவத்தினர் அவரது தோள்பகுதியில்தமதுவாயால் கடித்துள்ளனர். கடிவாங்கிய நபர் காயத்துடன் வந்ததைக் காணமுடிந்தது.

தாண்டிக்குளம்வீதிவழியாக செல்லும் பயணிகளை சிலயார் தூரம் புகையிரத வீதி வழியாகச் செல்லுமாறு இராணுவத்தினர் நிர்ப்பந்திக்கின்றனர். இவ்வாறு செல்லும் பிரயாணிகளிற்காணப்படும் தமிழ் இளம் பெண்களுடன் இராணுவத்தினர் சேட்டைவிடுபடுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (தி)

*கிளி-வைத்தியசாலைக்கு*

என்பனவற்றைக் கண்டறிய உதவும் என வைத்தியசாலை உயர்தர ஊழியர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (24)

*மரணதண்டனை*

என்பவரிடமிருந்து தவம் கிளப்பு வீதியில் வைத்து 03-02-91 அன்று விந்தன் என்பவர் கொள்ளையடித்தது விடுதலைப்புலிகளால் கண்டுபிடிக்கப்பட்டதென்றும், கொள்ளையடிக்கப்பட்ட பொருள்கள் யாவும் மீட்கப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டதென்றும் குறிப்பிடப்பட்ட பிரதி ஒன்று தொங்கவிடப்பட்டிருந்தது.

*மூன்று*

ரிக்கா நடத்திய ஆய்வில் இருந்து தெரியவந்தது. அதனைத்தொடர்ந்தே இந்தியாவும், இலங்கையும் கூட்டுச் சேர்ந்து இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதுஎன்றும் தீர்மானிக்கப்பட்டது.

அதன்படியே இந்த வேலைகள் அடுத்த மூன்று மாதத்தில ஆரம்பமாகும் என எண்ணெய் நிலவாயு நிர்வாகக் குழு அறிவித்துள்ளது.

*கலைநிகழ்ச்சிகள்*

விடுதலைப்புலிகள் கலை கலாசாரப் பிரிவினால் நடாத்தப்படும் முத்தமிழ் விழாவை வரவேற்கும் வகையிலும் சிறப்பாக அமைக்கும் வகையிலும் அனைவரும் மக்கள், பொது அமைப்புக்கள், நிறுவனங்களுடைய பங்களிப்பை தாங்கள் வேண்டி நிற்பதாக தெரிவித்துள்ளனர்.

வீதிகள் தோறும் கலை, கலாசாரத்தினை சித்திரிக்கும் அலங்கார வளைவுகள் ஓவியங்கள், பந்தல்களை நிறுவுதல், வீதிகள் தோறும் பதாதைகளைத் தொங்க விடுதல் போன்ற அலங்கரிப்புக்களைச் செய்யுமாறும், யாழ் மாவட்ட ரீதியில் சிறந்த அலங்கரிப்புக்கள் முதல் மூன்றிற்கும் யாழ் மாவட்ட பிரசாரப் பிரிவினர் சிறந்த பரிசில்களை வழங்கவுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளனர்.

# அமெரிக்கா அணுகுமுறை அதிருப்தியாக உள்ளது

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் அணுகுமுறை ஈராக்கிய கிளர்ச்சியாளர்களுக்கு பெரும் அதிருப்தியை கொடுத்திருக்கிறது என கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக அமெரிக்கா ஈராக்கின் உள்நாட்டு நெருக்கடியில் சம்பந்தப்பட விரும்பவில்லை என்றும், மத்திய கிழக்கில் அரசியல் ரீதியில் ஏற்படக்கூடிய பாரிய எதிர் விளைவுகளை தவிர்ப்பதே இதற்குரிய காரணம் என்றும் தெரிவித்திருந்தது.

ஆனால் ஈராக்கிய கிளர்ச்சியாளர்கள் அமெரிக்காவிடம் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைனை கவிழ்க்க உதவுமாறு பலதடவை கேட்டனர். அமெரிக்கா மறுத்துவிடவே தமது அதிருப்தியை கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கை குறித்து கருத்து வெளியிட்ட குர்திஷ்தான் தேசபக்த யூனியன் கிளர்ச்சிக் குழுவின் தலைவர் கமால் ஃபவூத் "ஈராக்கின் உள்நாட்டு நெருக்கடியில் சம்பந்தப்படுவதில்லை என்ற தீர்மானம் அமெரிக்காவின் நலனுக்கு உகந்தது அல்ல. அதை அவர்கள் மீள்பரிசீலனை செய்வார்கள்எனநம்புகின்றோம்" என்று தெரிவித்துள்ளது.

# பொலிஸ் அத்தியட்சகரும் நீதிபதியும் கைது

(டில்லி)

உத்தரப் பிரதேசத்தில் செரிபூர் மாவட்டத்தில் நடந்த கலவரம் தொடர்பாக மாவட்ட நீதிமன்ற நீதிபதியும், உதவிப் பொலிஸ் அத்தியட்சகரும் கடமையிலிருந்து நிறுத்திவைக்கப்பட்டுள்ளனர்.

கலவரத்தை அடக்குவதற்கு இவர்கள் இருவரும் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளத் தவறிவிட்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

# மத்தியில் பலமான ஆட்சி மாநிலங்களுக்கு அதிகாரம்

## ஜோதி பாசு

(சென்னை)

இந்தியா ஒற்றுமையாகவும் வலுவாகவும் இருக்கவேண்டுமானால் மத்தியில் பலமான அரசுஇருக்கவேண்டும்ஆனால் அதே சமயம் அதிகாரங்கள் மத்தியில் குவிந்திராமல் பரவலாக்கப்பட வேண்டும் என்று மேற்கு வங்க முதலமைச்சர் ஜோதி பாசு கூறியிருக்கிறார்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாநில அரசை அரசியல் சட்டத்தின் 356 பிரிவைப் பயன்படுத்திக் கலைக்க யோசித்தால் மாநிலங்களுக்கு இடையிலான சபையிலும் நாடாளுமன்றத்திலும் விவாதித்து முடிவு செய்யப்பட்ட பிறகே அது செயற்படுத்தப் படவேண்டும் என்று நேற்றுச் சென்னையில் கருத்தரங்கு ஒன்றில் பேசும்போது அவர் மேலும் தெரிவித்தார்.

கருத்தரங்கில் கலந்துகொண்ட தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளை போதியகாரணமின்றிக் கலைக்கப் பயன்படுத்தப்படும் 356 ஆவது பிரிவை அரசியல் யாப்பிலிருந்து நீக்கினால்தான் நாட்டில்ஜனநாயகமும்சமஷ்டி ஆட்சிமுறையும் பாதுகாக்கப்படும் என்று கூறினார்.

*அச்சத்துடன்*

லும், நபர்களினாலும் பலர் கடத்தப்படுகின்றனர் என்று தெரிவித்த அங்குவாழும் ஒருவர் இளம்பெண்கள் நிறைந்த வீடுகள் படையினரின் பலாத்கார முயற்சிகளுக்கு உட்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (தி)

*பரீட்சைக்காக*

நடப்பதற்காக சிறிலங்கா அரசாங்கம் மூன்றுநாள் போர்நிறுத்தத்தை மேற்கொண்டது தெரிந்ததே

ஆனால் இந்தப்போர்நிறுத்தம் குறித்துக் கருத்துத்தெரிவித்த சிறிலங்காபாதுகாப்பு அமைச்சின் பொதுச் செயலாளர் சிறில் ரணதுங்கா விடுதலைப்புலிகள் மீதான தாக்குதல் நிறுத்தப்படமாட்டாது எனத் தெரிவித்திருந்தார்.

இதேநேரம் பரீட்சை முடிந்த பின்னர் அறிக்கையொன்றினைவெளியிட்ட பாதுகாப்பு அமைச்சு நேரடியாக தாக்குதலை மேற்கொள்ளவில்லை என்றும், விடுதலைப்புலிகள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தாக்குதலை மேற்கொள்ளலாம் என்பதால் கண்காணிப்புடன் இருந்ததாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருந்த வேளைகளில் நேரடி மோதல் இடம்பெறவில்லை என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

*தாண்டிக்குள காவலரண்*

தாக்குதலையும் மேற்கொண்டனர், இத்தாக்குதலில் இராணுவ தரப்பில் பலத்த சேதமேற்பட்டுள்ளது. சேத எண்ணிக்கை விபரம் தெரியவில்லை. (மு)

## கருத்தரங்கு

1991ஆம் ஆண்டு ஆரம்பதர பரீட்சைக்கு தோற்றுவதற்கு வடபகுதி சங்கீத சபையில் விண்ணப்பித்தோருக்கான கருத்தரங்கு ஏப்பிரல் மாதம் 03ஆம் 04ஆம் 05 ஆம் திகதிகளில் யாழ் இந்துமகளிர் கல்லூரியில் காலை எட்டுமணி முப்பது நிமிடமளவில் ஆரம்பமாகும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

*சிற்பேபாட*

சூழ்நிலைக்கேற்ற பயன்பாடும்" என்னும் பொருள் பற்றிய கருத்தரங்கு தவிர்க்க முடியாதகாரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக தமிழீழ ஆய்வு நிறுவன ஏற்பாட்டுக்குழுவினர் அறிவித்துள்ளனர்.

*ராஜீவ்*

தில் மேலும் பேசிய முன்னாள் முதல்வர்,

என் பெயர் கருணாநிதி; நான் ஒரு தேசவிரோதி என குறிப்பிட்டு உரையை ஆரம்பித்து

எனக்கு இத்தாலி நாட்டுடன் எந்தத் தொடர்பும் இல்லை. நான் சுவிட்ஸலாந்திற்குச்சென்றதேகிடையாது; சுவிஸ் வங்கியில் எனக்குக் கணக்கு எதுவுமில்லை; பிரபல ஆயுதக் கடத்தல்காரர் அட்னான் கசோகியைச் சந்தித்ததும் இல்லை. அவருடன் விருந்துண்டதுமில்லை. என்றாலும் தேசவிரோதி என்று அழைக்கப்படுகிறேன். அறுபத்தேழு வயதாகும் நான் ஐம்பத்து மூன்று வருடங்களை பொது வாழ்வில் செலவிட்டிருக்கிறேன். இருபது தடவைகளுக்குமேல் பொதுப்பிரச்சினைகளுக்காகச் சிறைத்தண்டனை பெற்றிருக்கிறேன். என்னைப் பார்த்துத்தான் ராஜீவ் காந்தியும், அவரது சகாக்களும் தேச விரோத குற்றச்சாட்டு சுமத்துகிறார்களென குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம்இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.